**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF TMT.M.SADHANA COLOUR GRANITE QUARRY, SF.NO. 366 (PART), LEASE OVER AN EXTENT OF 1.87.0 HA AT JAGADEVIPALAYAM VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 24.07.2024 AT 11.00 AM AT M/s. SRI BOOPATHY PADMA MAHAL, THIRUVANNAMALAI MAIN ROAD, KANNADAHALLI VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT- 635 203:**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S.Babu | : | Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. K. Ganesan | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Tmt.M. Sadhana | : | The Proponent, **Tmt.M.Sadhana Colour Granite Quarry** |
| 5 | Thiru.Umamaheswaran | : | EIA Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri |
| | Public | : | 46 Nos. (Attendence enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed Tmt.M.Sadhana Colour Granite Quarry, Lease over an Extent of 1.87.0 Ha at Jagadevipalayam Village, Bargur Taluk, Krishnagiri District is required to get

Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinamalar" and "The New Indian Express" dated 21.06.2024 and bit notices regarding public hearing was issued to the public of Jagadevipalayam Village, Bagimanoor Village, Sappamuttlu Village and Jittobanapalli Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Revenue Divisional Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed colour granite quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.Umamaheswaran, EIA Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri of the proposed Colour Granite quarry project has made presentation about the proposed Colour Granite quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed colour granite quarry project.

The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Syed Ahmeed, Jagadevipalayam Village:**

Thiru. Syed Ahmeed has informed that, the proposed granite quarry project is very beneficial and will provide employment to the local people.

2. **Thiru. R.Murugesan, Jagadevipalayam Village:**

Thiru. R.Murugesan has said that, the proposed quarry project will provide various benefits to the local village and requested to offer employment to the local people in the proposed quarry. He also asked the quarry management to help for the improvement of school infrastructure in the village and finally, he expressed his welcome to the project.

3. **Thiru. Saravanan, (Jagadevipalayam Panchayath Vice President):**

Thiru. Saravanan has said that, they have no objection to the proposed quarry project and requested to provide employment to the local people in the proposed quarry.

4. **Thiru. Muthusamy, Bagimanoor Village:**

Thiru. Muthusamy has said that, he welcomes the proposed quarry project.

5. **Thiru. Kabilan, Jagadevipalayam Village:**

Thiru. Kabilan has requested to provide employment to the local youth in the proposed quarry.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 6 number of petitions were received on the proposed Tmt.M.Sadhana Colour Granite Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Colour Granite Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

25/7/2024

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

25/7/24

**Revenue Divisional Officer**
**Krishnagiri**

4/7

**District Collector**
**Krishnagiri**

4/7

**திருமதி.M. சாதனா கலர் கிரானைட் குவாரி, சர்வே. எண்.366 (பகுதி), ஜெகதேவிபாளையம் கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட கலர் கிரானைட் குவாரி 1.87.0 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 24.07.2024 அன்று திருவண்ணாமலை மெயின் ரோடு, கண்ணடஹள்ளி கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 203 இல் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ பூபதி பத்மா மஹாலில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.S.பாபு | : | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.K.கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திருமதி.M சாதனா | : | உரிமையாளர்<br>திருமதி.M சாதனா கலர் கிரானைட் குவாரி |
| 5 | திரு. உமாமகேஸ்வரன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி |
| | பொதுமக்கள் | : | 46 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திருமதி.M சாதனா கலர் கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த

வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, பொதுமக்கள் மற்றும் திருமதி.M சாதனா கலர் கிரானைட் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 21.06.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், ஜெகதேவி கிராமம், பாகிமானூர் கிராமம், சாப்பமுட்டுலு கிராமம், ஜிட்டோபனபள்ளி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ளகலர் கிரானைட் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் கலர் கிரானைட் குவாரிதிட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திருமதி.M சாதனா கலர் கிரானைட் குவாரி உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள கலர் கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திருமதி.M சாதனா கலர் கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. உமாமகேஸ்வரன், தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கலர் கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. சையது அகமது, ஜெகதேவிபாளையம் கிராமம்:**

திரு. சையது அகமது அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டமானது மிகவும் நன்மை பயக்கும் திட்டமென்றும், இதன் மூலம் உள்ளூர் மக்களுக்குவேலைவாய்ப்பு கிடைத்திடும் என்றும் கூறினார்.

2. **திரு.R. முருகேஷன், ஜெகதேவிபாளையம் கிராமம்:**

திரு. R. முருகேஷன் அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்தின் மூலம் பல்வேறு பலன்கள் கிடைக்கபெறும் என்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரியில் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு

வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மேலும், குவாரி நிர்வாகத்தினரிடம் உள்ளூரில் அமைந்துள்ள பள்ளி உள்கட்டமைப்பு வசதி மேம்பட்டிற்கு உதவுமாறு கூறி இத்திட்டத்தை தான் வரவேற்பதாக கூறினார்.

**3. திரு . சரவணன், ஜெகதேவிபாளையம் கிராம ஊராட்சி துணை தலைவர்:**

திரு . சரவணன் அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்திற்கு தங்களுக்கு எவ்வித ஆட்சேபனை இல்லையென்றும், உள்ளூர் மக்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரியில் வேலைவாய்ப்பு வழங்கிடுமாறு கேட்டுக் கொண்டார்.

**4. திரு .முத்துசாமி, பாகிமானூர் கிராமம்:**

திரு. முத்துசாமி அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்தை தான் மகிழ்ச்சியுடன் வரவேற்பதாக தெரிவித்தார்.

**5. திரு . கபிலன், ஜெகதேவிபாளையம் கிராமம்:**

திரு. கபிலன் அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திருமதி.M சாதனா கலர் கிரானைட் குவாரிதிட்டம்தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 6 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திருமதி.M சாதனா கலர் கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கலர் கிரனைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ,மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>ஓசூர் | வருவாய் கோட்டாட்சியர்<br>கிருஷ்ணகிரி | மாவட்ட ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி |